**செய்தி வெளியீடு எண்: 538** **நாள்: 12.08.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (12.8.2018) தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை தமிழ்நாடு அரசு மூடியதை எதிர்த்து, அந்நிறுவனம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடுத்துள்ள வழக்கில், 9.8.2018 அன்று வழங்கிய உத்தரவுகளின் மீது அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன எடுக்க வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு கே.பி.அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., சட்டத்துறை செயலாளர் திரு.சு.ச. பூவலிங்கம், அரசு தலைமை வழக்கறிஞர் திரு. விஜய் நாராயண், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திரு.டி. சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**